**செய்தி வெளியீடு எண் 397** **நாள் 12 .08.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு B.V. ரமணா அவர்கள் இன்று 12.08.2015 சென்னை தலைமைச்செயலகத்தில் பால் மற்றும் பால்பொருட்கள் விற்பனையை அதிகரிப்பது குறித்து உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட ஆய்வுக்கூட்டம் நடத்தினார். இந்த கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத்துறை அரசு செயலர் முனைவர் ச. விஜயகுமார், இ.ஆ.ப., பால்வளத்துறை ஆணையர் / ஆவின் நிர்வாக இயக்குநர் திரு சுனீல் பாலீவால், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உத்தரவின் பேரில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு பால்வளத் திட்டங்களின் பயனாகவும், பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பால்கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கியதின் காரணமாகவும், தமிழகத்தில் 2–ம் வெண்மைப்புரட்சி ஏற்பட்டு பால் கொள்முதல் நாளொன்றுக்கு 30 இலட்சம் லிட்டர் என்ற இலக்கினை அடைந்து சரித்திர சாதனை படைத்துள்ளது. சென்னை மாநகரில் பால் விற்பனை நாளொன்றுக்கு 11.70 இலட்சம் லிட்டர் என்ற அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரில் பால் விற்பனை இலக்கு வரும் மார்ச் 2016–க்குள் நாளொன்றுக்கு 13.50 இலட்சம் லிட்டர் என்றும், மாவட்ட அளவில் நாளொன்றுக்கு 11.50 இலட்சம் லிட்டர் என்ற அளவில் நிர்ணயிக்கப்பட்டு அந்த இலக்கினை அடைவதற்காக எடுக்கப்படவேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும், ஆவின் பால் மற்றும் பால்பொருட்கள் நுகர்வோர்களுக்கு புறநகர் பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து சில்லறை விற்பனை கடைகளில் கிடைக்க ஏதுவாக புதிய முகவர்கள் நியமிக்கப்படவேண்டியதன் அவசியம் குறித்தும், ஆவின் டெட்ராபேக் ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் உடனடியாக கண்டறியப்படவேண்டும் என்பதன் அவசியம் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

பால் விற்பனையை அதிகப்படுத்துவதற்கு ஏதுவாக ஆவின் பணியாளர்கள் அடங்கிய 16 குழுக்கள் அமைக்கப்பட்டு பிரதிமாதம் 15–ம் தேதிக்குப் பிறகு வரும் சனிக்கிழமைகளில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு நேரில் சென்று நுகர்வோர்களுக்கு உடனடியாக மாதாந்திர பால் அட்டைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஒன்றியங்கள் அந்தந்த மாவட்டங்களில் பால் விற்பனையை அதிகரிக்க சமையல் கலைஞர்கள், உணவக உரிமையாளர்கள் ஆகியோர்களின் கலந்தாய்வுக் கூட்டம் ஏற்பாடு செய்து பால் மற்றும் பால்பொருட்களை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வரும் செப்டம்பர் மாதத்தில் அம்பத்தூரில் புதிய பால்பொருட்கள் பண்ணை செயல்பட உள்ளது. இந்த பண்ணையில் 15,000 லிட்டர் ஐஸ்கிரீம் மற்றும் 1000 கிலோ பன்னீர் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக அமைய உள்ளது. எனவே, மாவட்ட அளவில் ஐஸ்கிரீம் மற்றும் பன்னீர் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

சென்னை மாநகரில் உணவக உரிமையாளர்கள் மற்றும் சமையல் கலைஞர்கள் ஆவின் பால் வாங்கும்போது அதிகபட்ச சில்லறை விற்பனை விலையிலிருந்து லிட்டர் ஒன்றுக்கு ரூ.1/–குறைவாக வழங்குவதற்கு மேலும் பால்பொருட்களின் விலையில் தள்ளுபடி வழங்கவும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான தகவல்கள் பெறுவதற்காக தனியான ஒரு சேவை மையம் 9445530503 என்ற எண்ணில் நந்தனம் கூட்டாண்மை அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது.

நுகர்வோர் தங்களது ஆலோசனை மற்றும் புகார் பற்றி தெரிவிக்க ஆவின் 24 மணிநேர நுகர்வோர் 'நலம் மற்றும் சேவைப்பிரிவு' 1800 425 33 00 (இலவச சேவை) என்ற தொலைபேசியிலோ அல்லது aavincomplaints@gmail.com என்ற இணையதள முகவரியிலோ தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

இந்நிகழ்ச்சியில் இணை நிர்வாக இயக்குநர் திருமதி ஆர். கெஜலட்சுமி, இ.ஆ.ப., அ துணை பால ஆணையர் திரு எஸ்.துரைசுவாமி, பொதுமேலாளர் (விற்பனை) திரு எஸ்.கே.கதிர்வேலு மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**